பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

20 06 2025 7 15
வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமர் திரு நரேந்திர மோடி பீகார் மற்றும் ஒடிசாவில் இன்று பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

2. இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக ரஷ்ய துணைப் பிரதமர் திரு அலெக்ஸி ஓவர்சுக்குடன் மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

3. இந்தியா - இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

4. ஆபரேஷன் சிந்து நடவடிக்கையின் ஒரு பகுதியாக இஸ்ரேலில் இருந்தும் இந்தியர்களை அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

5. இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி லீட்ஸில் இன்று தொடங்குகிறது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி பீஹார் மற்றும் ஒடிசாவில் இன்று பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைக்கிறார்.

இன்று பிற்பகல் பீஹார் செல்லும் அவர், சிவானில் நடைபெறும் நிகழ்ச்சியில் 400 கோடி ரூபாய் மதிப்பிலான வைஷாலி - தியோரியா ரயில் பாதை திட்டத்தை தொடங்கி வைக்கிறார்.

இந்த வழித்தடத்தில் புதிய ரயில் போக்குவரத்தையும் அவர் கொடியசைத்து தொடங்கி வைக்க உள்ளார்.

**Marhowra** தொழிற்சாலையில் உருவாக்கப்பட்ட நவீன ரயில் எஞ்சினை ஏற்றுமதிக்காக அவர் அறிமுகம் செய்கிறார்.

'தூய்மை கங்கை' இயக்கத்தின்கீழ் ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களையும் பிரதமர் தொடங்கி வைக்க உள்ளார்.

மூவாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான குடிநீர்த் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

500 கோடி ரூபாய் மதிப்பிலான மின் திட்டங்களுக்கும் அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

நகர்ப்புற வீட்டுவசதி திட்டத்தின்கீழ் 53 ஆயிரம் வீடுகளுக்கான ஒதுக்கீட்டு ஆணையை பயனாளிகளுக்கு வழங்குவதுடன், கட்டி முடிக்கப்பட்ட 6 ஆயிரம் வீடுகளின் சாவிகளை பயனாளிகளிடம் அவர் வழங்க உள்ளார்.

பின்னர் இன்று மாலை ஒடிசா செல்லும் பிரதமர், மாநில பிஜேபி அரசின் ஓராண்டு நிறைவு விழாவில் பங்கேற்கிறார்.

18 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களையும் அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

**Budh** மாவட்டத்திற்கு புதிய ரயில் சேவையை அவர் கொடியசைத்து தொடங்கி வைக்க உள்ளார்.

100 மின்சார பேருந்துகளின் சேவைகளையும் அவர் தொடங்கி வைக்கிறார்.

பின்னர் ஆந்திரா செல்லும் பிரதமர் திரு. நரேந்திர மோடி, விசாகப்பட்டினத்தில் நாளை காலை நடைபெறும் சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

இந்தியா – ரஷ்யா இடையேயான இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பாக ரஷ்ய துணைப் பிரதமர் திரு அலெக்ஸி ஓவர்சுக்குடன் மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் பேச்சு நடத்தியுள்ளார்.

ரஷ்யாவின் செயிண்ட் பீட்டர்ஸ்பர்கில் நடைபெறும் சர்வதேச பொருளாதார மன்றக் கூட்டத்தில் பங்கேற்க அங்கு சென்றுள்ள அமைச்சர், ரஷ்ய துணைப் பிரதமருடன் உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் பங்கேற்றார்.

போக்குவரத்து, உள்கட்டமைப்பு, அரியவகை கனிமங்கள் போன்ற துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் அதிகரிப்பது குறித்து ரஷ்ய துணைப் பிரதமருடன் ஆலோசனை நடத்தியதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பின்னர் சர்வதேச பொருளாதார மன்றக் கூட்டத்தில் பேசிய திரு. அஸ்வினி வைஷ்ணவ், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப கட்டமைப்பை வலுப்படுத்த இந்தியாவில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கூறினார்.

<<<<>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம், இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தக ஒத்துழைப்பை வலுப்படுத்தும் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

லண்டனில் உலகளாவிய இந்திய மன்றக் கூட்டத்தில் பேசிய அவர், இந்த ஒப்பந்தம் வர்த்தகத்தை அதிகரிப்பது மட்டுமல்லாமல் இரு நாடுகளின் தேசிய நலன்களுக்கு ஏற்ப எதிர்கால செயல்திட்டங்களை உருவாக்கவும் உதவும் என்று கூறினார்.

உற்பத்திக்கான இந்தியா, உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டம் போன்றவற்றால் உலகளாவிய உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுத்து வருகிறது என்று அவர் கூறினார்.

நிதி தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் இங்கிலாந்தைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் இந்தியாவில் முதலீடு செய்ய அதிக வாய்ப்புள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

சரக்குகள், சேவைகள், தொழில்நுட்பம், புதுமைக் கண்டுபிடிப்பு ஆகியவற்றில் பரஸ்பர பலன்களை இரு நாடுகளுக்கும் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்தும் என்று திரு. பியூஷ் கோயல் கூறினார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்து நடவடிக்கையின் ஒரு பகுதியாக இஸ்ரேலில் இருந்தும் இந்தியர்களை அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஈரான் - இஸ்ரேல் இடையே ஏற்பட்டுள்ள மோதலைத் தொடர்ந்து இஸ்ரேலில் இருந்து வெளியேற விரும்பும் இந்தியர்களை தாயகம் அழைத்துவர முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருப்பமுள்ளவர்கள் இஸ்ரேல் எல்லையைக் கடந்து அண்டை நாடுகளுக்கு அழைத்து வரப்பட்டு அங்கிருந்து விமானம் மூலம் இந்தியாவுக்கு அழைத்துவர ஏற்பாடு செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான் ஏற்பாடுகளை டெல் அவிவில் உள்ள இந்திய தூதரகம் மேற்கொண்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அங்குள்ள தூதரகத்தில் 24 மணி நேர கட்டுப்பாட்டு அறை ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

தற்போதை சூழல் குறித்து இந்தியா உன்னிப்பாக கண்காணித்து வருவதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் நலனுக்கும், அவர்களின் பாதுகாப்புக்கும் மத்திய அரசு தொடர்ந்து உயர் முன்னுரிமை அளித்து வருவதாக வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

ஆபரேஷன் சிந்து நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஈரானில் இருந்து நேற்று 110 இந்திய மாணவர்கள் தில்லி அழைத்து வரப்பட்டனர்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உத்தராகண்ட் மாநிலத்தில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

டேராடூனில் குடியரசுத்தலைவர் ஓய்வு மாளிகையில் பொதுமக்களுக்கான பல்வேறு வசதிகள் மற்றும் பார்வையாளர் மையத்தை அவர் திறந்து வைக்க உள்ளார்.

அங்கு குடியரசுத்தலைவர் பூங்காவுக்கு அவர் அடிக்கல் நாட்ட உள்ளார்.

டேராடூனில் உள்ள பார்வை மாற்றுத்திறனாளிகள் தேசிய நிறுவனத்திற்கும் இன்று அவர் செல்ல உள்ளார்.

அங்கு அறிவியல் கண்காட்சியை பார்வையிடுவதுடன், மாணவர்களுடன் அவர் கலந்துரையாட உள்ளார்.

நைனிடால் உள்ள ஆளுநர் மாளிகையின் 125வது ஆண்டை ஒட்டி அங்கு நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் திருமதி திரௌபதி முர்மு, தபால்தலை ஒன்றை வெளியிட உள்ளார்.

<<<<>>>>

அரிவாள் செல் ரத்தசோகை நோயை முழுவதுமாக ஒழிக்க அரசு உறுதிபூண்டுள்ளதாக பழங்குடியினர் நலத்துறை இணையமைச்சர் திரு. துர்காதாஸ் உய்கே கூறியுள்ளார்.

அரிவாள் செல் ரத்தசோகை தினத்தையொட்டி புதுதில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், பழங்குடியினர் இடையே இந்த நோய் அதிகம் காணப்படுவதாகக் கூறினார்.

அனைத்து வகைகளிலும் பழங்குடியினர் மேம்பாட்டுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரிவாள் செல் நோய் ஒழிப்பில் மாநில அரசுகளுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என திரு. துர்காதாஸ் உய்கே கூறினார்.

<<<<>>>>

யோகா பயிற்சியை அன்றாட வாழ்க்கையின் அங்கமாக மக்கள் கடைபிடிக்க வேண்டும் என்று மத்திய ஆயுஷ் துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ் கேட்டுக்கொண்டுள்ளார்.

சர்வதேச யோகா தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி ஆகாஷ்வாணிக்கு அளித்த சிறப்புப் பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தாங்கள் யோகா பயிற்சியை மேற்கொள்வதுடன், குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நண்பர்களுடன் யோகா பயிற்சியை மேற்கொள்ள ஊக்குவிக்க வேண்டும் என அவர் கூறினார்.

மக்களின் நல வாழ்வை உறுதி செய்ய மத்திய அரசு யோகாவை பிரபலப்படுத்தி வருவதாக அவர் தெரிவித்ததார்.

'இல்லம்தோறும் யோகா' என்ற இலக்குடன் அரசு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

ஆயுர்வேதா, சித்தா, யுனானி உள்ளிட்ட மருத்துவ முறைகளை பிரபலப்படுத்தவும் மத்திய அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக திரு. பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்தார்.

<<<<>>>>

சர்வதேச யோகா தினம் வரும் சனிக்கிழமை கொண்டாடப்படுவதை ஒட்டி நாடுமுழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

தமிழகத்தில் நடைபெற்று வரும் யோகா விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

காஞ்சிபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட யோகா தொடர்பான நிகழ்ச்சியில் அஞ்சல்துறை மற்றும் தொல்லியல் துறை ஊழியர்கள் பங்கேற்றனர்.

யோகா பயிற்சி உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதாக இதில் பங்கேற்றவர்கள் எமது செய்தியாளாரிடம் தெரிவித்தனர்.

**(Voice Byte – Postal Employees – 57 sec)**

<<<<>>>>

கைலாஷ் மானசரோவர் யாத்திரை நாத்துலா கணவாய் வழியாக இன்று துவங்குகிறது.

காலை மணி 8.45க்கு இந்த யாத்திரையை சிக்கிம் ஆளுநர் திரு. ஓம்பிரகாஷ் மாத்தூர் தொடங்கி வைக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த ஆண்டு மொத்தம் 10 குழுக்கள் செல்ல உள்ளன.

இன்று புறப்படும் முதல் குழுவில் 36 பேர் இடம்பெற்றுள்ளனர்.

<<<<>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

லீட்ஸில் இந்திய நேரப்படி பிற்பகல் மணி 3.30க்கு இப்போட்டி தொடங்கவுள்ளது.

சுப்மன் கில் தலைமையிலான இந்திய அணி, இங்கிலாந்துக்கு எதிராக 5 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது.

**<<<<The End>>>>**